ARUN AUDIOS

தெய்வச் சேக்கிழார் அருளிய

பெரியபுராணம்

அறுபத்து மூன்று நாயன்மார் அருள்வரலாறு

ஒலிக்களஞ்சியம்

ஒலிக்குறுந்தகடுகள் ஒலிப்பேழைகள்

(ஆங்கில வரலாற்றுச் சுருக்கத்துடன்)





விரிவுரை

செந்தமிழ்வாரிதி, சிவஞானக்கலாநிதி

பேராசிரியர்

டாக்டர். இரா. செல்வக்கணபதி எம்.ஏ.,பிஎச்.டி.,



அறிமுகவுரை

நயவுரை நம்பி, வைணவச் செம்மல்

டாக்டர். S. ஜெகத்ரட்சகன் M.A., D.Lit.,



ஆங்கில வரலாற்றுச் சுருக்கம்

இராமநாதன் பழனியப்பன் B.E.,

வெளியீடு

தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை

கரிகாலன் தெரு, கலாசேத்திரா காலனி, பெசண்ட் நகர்

சென்னை - 600 090.

சேக்கிழார் அருளிய பெரியபுராணம் 63 நாயன்மார் அருள் வரலாறுகள் கீழ்க்காணுமாறு ஒலிக்களஞ்சியங்களாக வெளியிடப்பட்டுள்ளன.

1. ஒலிக்குறுந்தகடுகள்(Compact Disc) தலா 80 நிமிடம்
2. ஒலிப்பேழைகள்(Audio Cassette) தலா 65 நிமிடம்
3. MP 3 CD க்கள் நான்கு பாகங்கள் தலா 13 மணிவிதம் 52 மணி
4. வரலாற்றுச் சுருக்கம் ஆங்கிலத்தில் MP 3 CD - 15 மணி

1. ஒலிக்குறுந்தகடுகள் (Compact Disc)

40 குறுந்தகடுகளில் 63 நாயன்மார் வரலாறுகளும் அடக்கப்பட்டுள்ளன.

Track - 1 - அறிமுகவுரை
Track - 2 - தொடக்கவுரை
Track - 3 - ஆங்கில வரலாற்றுச் சுருக்கம்
Track - 4 - பெரியபுராண விரிவுரை

2. ஒலிப்பேழைகள் (Audio Cassette)

40 ஒலிப்பேழைகளில் 63 நாயன்மார் வரலாறுகளும் அடக்கப்பட்டுள்ளன.

டாக்டர். இரா. செல்வக்கணபதி ஆற்றிய பெரியபுராண் விரிவுரை மட்டும்

3. MP 3 CD 1 முதல் 4 பகுதிகள்

தலா 13 மணி விதம் 52 மணி நேரம்


ஆங்கில வரலாற்றுச் சுருக்கம், பெரியபுராண் விரிவுரை

4. தனியே ஆங்கிலத்தில் நாயன்மார் MP 3 CD

வரலாற்றுச் சுருக்கம் – 5 மணி

டாக்டர். இரா செல்வக்கணபதி ஆற்றிய விரிவுரை – ஆங்கிலத்தில் வரலாற்றுச் சுருக்கம் எழுதி வழங்கியவர் திரு. இராமநாதன் பழனியப்பன்

பாலமுருகனடிமை



அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்
இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632 517.
வேலூர் மாவட்டம், தமிழ்நாடு..

அன்புடையீர்

அருளாசி

மாபெரும் கவிஞராக, புலவராக, அறிஞராக அமைச்சராக விளங்கிய தெய்வச் சேக்கிழார் 63 திருத் தொண்டர்களின் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணமாகப் பாடியுள்ளார். "செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க செயற்கரிய செய்த திருத்தொண்டர்களின் வரலாறு 'பெரிய புராணம்" என்று வழங்கப் படுகிறது.

நாயன்மார்களின் வரலாற்றைப் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடியுள்ளார் சேக்கிழார்.

இனிய செய்யுள் நடையால் நடக்கும் பெரிய புராணத்தை மிக எளிதாக உரைவழி சென்று மனத்தில் மணக்கும் வண்ணம் ஒலிக் குறுந்தகடுகளாக வழங்கும் முயற்சியால் வெற்றி பெற்றிடுவார் பேராசிரியர்.

டாக்டர். கிரா. செல்வக்கணபதி அவர்கள்.

சொற்பொழிவுச் செம்மலாகவும் செந்தமிழ் வாரிதியாகவும் விளங்கும் அவர் பல நூல்களின் வழியாகவும், மேடைகளின் வழியாகவும், எழுத்து வழியாகவும், மொழியாகவும் அரிய சமயத் தொண்டு புரிந்து வருபவர். அவரின் பெரிய புராணச் சொற்பொழிவு செந்தமிழ்ச் சுவையும் பக்திச் சுவையும் நிறைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்துக்களே வெளிவர பேருதவி செய்தோர் ஆழ்வார்கள் ஆய்வு மைய நிறுவனர், மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர், பண்ணின் நேயரை நம்ப, டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் என்பதறிந்து மிகவும் மகிழ்வுற்றேன்

"சங்கத்துச் சான்றோர்கள் இன்றிருந்தால் சாலக்கண்
சங்கம் ஜகத்ரட்சகன் இடமே - பொங்கித்
திகழ்கோயில் கீ, தென்று செந்தமிழ் பாடி
தருக்கோடு இருப்பர் தமிழ்த்து"

என்று கவிஞர் நா. கோவேந்தன் பாடியதற்குச் சான்றாக விளங்குபவர் அவர்

அவரின் பேருதவியால் பேராசிரியர் கிரா. செல்வக்கணபதி அருளிய நாயன்மார்கள் வரலாற்றுச் சொற்பொழிவுகள் தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் இணையதள வழியே இன்தமிழ் நெஞ்சம் எழுப்புமாறு அமைத்த பெருமான் பெரும் பெயர் முருகன் இன்னருள் இறைஞ்சி வாழ்த்துவன்

[illegible]

11.5.05

15332

2/2

இறைவனைப் பிரார்த்திப்போம்

தெய்வச் சேக்கிழார் அருளிய பெரியபுராணம், 'பக்திச் சுவை, நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட அருள் நூல்!

அறுபத்து மூன்று நாயன்மார்களின் அற்புத அருள் வரலாறுகளை, முன்னரே ஒலிப்பேழைகளாக வெளியிட்ட எம்பேராசிரியப் பெருந்தகை,

செந்தமிழ் வாரிதி, சிவஞானக்கலாநிதி
முனைவர். **திரு. இரா. செல்வக்கணபதி** அவர்கள்,

தற்போது, காலத்தின் தேவை கருதி, ஒலிக்குறுந்தகடுகள் எனப்படும் ஆடியோ சி.டி.க்களாக, பெரிய புராண நாயன்மார் அறுபத்து மூவர் அருள் வரலாறுகளையும், நாற்பது சி.டி.க்களாக வெளிக் கொணர்ந்துள்ளார்கள்.

உலகத் தமிழர்களின் உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ள, ஒலி உருவம் எடுத்துவரும் இக்குறுந்தகடுகள், மதுரைத் தமிழ் இசைச் சங்கத்திலும், மதுரைத் தியாகராயர் கல்லூரி, தொல்காப்பியர் அரங்கத்திலும், பிற இடங்களிலும், எம்பேராசிரியர் அவர்கள் ஆற்றிய சுந்தரத் தொடர் விரிவுரைகளின் தொகுப்பு!

எண்ணங்களால் உயர்ந்த, இன்பத் தமிழர்களின், ஆன்மிக அருட்செல்வத்தை அள்ளி வழங்கும் இக்குறுந்தகடுகளுக்கு, எளிய இனிய தமிழில், அழகிய தொடக்கவுரை ஒன்றை,

நயவுரைநம்பி, வைணவச்செம்மல்
டாக்டர் **திரு.எஸ். ஜெகத்ரட்சகன்** அவர்கள்

வழங்கிப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

அவர்கள், நற்றமிழ்ச் செல்வமாம் நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்திற்கு, நயவுரை கண்ட நாவலர் பெருமான்!

பாரத் நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின், பாராட்டுக்குரிய வேந்தர்.

ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் நிறுவனர்!

பொறியியல், மருத்துவம், கலை, அறிவியல் வளர்ச்சிக்குக் கல்லூரிகள் பல கண்ட கல்வித் தந்தை.

தலைமை சான்ற தமிழ்மொழிப் புலமையும், அருவியாய்ப் பொழியும் அரிய பேச்சாற்றலும், தமிழ் அறிந்தாரை உறவாகக் கருதிப் பேணும் ஒப்பிலாச் சால்பும் மிக்க பண்பாளர்!

சட்டப்பேரவை உறுப்பினராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றிப் புகழ் பெற்ற அரசியல் வித்தகர்.

எம் பேராசிரியர்பால் உளமார்ந்த தமிழன்பு கொண்டு, உவப்பத் தலைக்கூடி, உபசரித்து வரும் நேச நெஞ்சினர்!

பீடுமிகு, பெரிய புராணப் பேருரைகளுக்கு, அவர்கள், புதிய மகுடம் ஒன்றைச் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள்!

அவர்களது அன்பிலும், அளப்பரிய கொடையிலுமே இக்குறுந்தகடுகள் ஒலி உலா வருகின்றன!

சைவத் தமிழுலகம், அவர்களுக்கு நன்றி பாராட்டும் கடமையுடையது.

சென்னை ஆன்மிக இலக்கியவட்டத்தின் நிறுவனரும், சைவசமயத்திற்கு ஒல்லும் வகையான் பணியாற்றி வருபவருமாகிய தொழிலதிபர்,

திரு. இராமநாதன் பழனியப்பன், அவர்கள்

நாயன்மார் அருள் வரலாற்றுச் சுருக்கத்தை, அகம் நைவிக்கும் ஆங்கிலத்தில், சைவப்பெருமிதம் ததும்ப எழுதி, ஒலிப்பதிவு செய்து உபகரித்துள்ளார்கள்.

பொள்ளாச்சி, அருட்செல்வர்,

திரு. நா. மகாலிங்கம் அவர்கள்

தாம் வெளியிட்ட சித்திரப் பெரியபுராணப் படங்களை, இக்குறுந்தகடுகளில் இணைத்துக் கொள்ள இசைவளித்துள்ளார்கள்.

வழக்கம் போல், எழுச்சிக்கவிஞர் **திரு. கங்கை மணிமாறன்** அவர்கள் அறிமுகவுரை, உங்களைக் கம்பீரமாக வரவேற்கிறது.

சென்னை அண்ணாநகர், சவுண்ட் சாஃப்ட் நிறுவன அதிபர், **திருவாளர். என். ரெங்கராஜுலு** அவர்களின் பாங்குறு தொழில் நுட்பத்தில், இவ்வொலிக் கோலங்கள் உயிர்பெற்று எழுந்து, உங்கள் செவிகளில் செந்தேன் பிலிற்றுகின்றன.

சென்னை, சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை சார்பில், அருண் ஆடியோஸ் இக்குறுந்தகடுகளை வெளியிடுவதில் பூரிப்படைகிறது.

உலகெங்கும் வாழும் சைவப் பெருமக்கள், இக்குறுந்தகடுகளை ஏற்றுப் போற்றி மகிழ அன்புடன் வேண்டுகின்றோம்.

மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்கி, உணர்வரிய மெய்ஞ்ஞானம், உவமையிலாக் கலைஞானம் எங்கும் சிறக்க இறைவனைப் பிரார்த்திப்போம்.

2/2

அறிமுக உரை

நயவுரை நம்பி, வைணவச்செம்மல்
டாக்டர். திரு. எஸ். ஜெகத்ரட்சகன், எம்.ஏ.,டி.லிட்., அவர்கள்

❊ ஒவ்வொரு மொழிக்கும் சில தனித்தன்மைகள் உண்டு.

❊ தமிழ் மொழி, பக்திப் பனுவல்கள் பலவற்றைக் கொண்ட தொன்மொழியாகும்.

❊ தமிழுக்கு வாய்த்திருப்பது போல, ஈரம் கனிந்த பக்திப் பாடல்களின் தொகுதிகள், ஹீப்ரு மொழிக்கு அடுத்ததாகவே, வடமொழியிலும் உள்ளன என்பதை நினைத்து நாம் பெருமைப்படலாம்.

❊ அறிவுத் தகுதியுடைய ஒரு மனிதன்,

❊ நான் யார்?

❊ என்னைச் சுற்றிலும் உள்ள பொருள்கள் யாவை?

❊ எனக்கும் அவைகளுக்கும் என்ன தொடர்பு?

❊ படைத்தவன் ஒருவன் உண்டா?

❊ அவனுக்கும் எனக்கும் என்ன தொடர்பு?

❊ நான் எங்கிருந்து வந்தேன்?

❊ இனி என்ன ஆவேன்?

❊ இத்தகைய கேள்விகளை, அவன் எப்போதாவது, கேட்டுக் கொண்டே இருக்கிறான்.

❊ பழைய காலத்து மனிதனும் கேட்டான்.

❊ இடைக்காலங்களிலும் தொடர்ந்து கேட்டான்.

❊ இப்போதும் கேட்கிறான்.

❊ இக்கேள்விகளுக்கு, காலங்காலமாகச் சான்றோர்கள் விடைகள் கூறினார்கள்.

❊ அம்மறு மொழிகள்
அவரவர்கள் பக்குவ நிலைக்கு ஒத்தாற்போல் அமைந்தன.

❇ இம்மறு மொழிகளின் தொகுதிகளை,
அறிஞர்கள் பலர்,
பலவாறு பாகுபடுத்தி வைத்திருக்கிறார்கள்.

❇ இப்பாகுபாடுகளுக்குத்தான்
'சமயங்கள்' என்று பெயர்.

❇ சைவ வைணவ நெறிகளைப் பரப்புவதற்காக
'நாளும் இன்னிசையால்'
ஞானக் கோட்பாடுகளைப் பரப்புவதில்
தோன்றிய அருளாளர்கள்
சைவத்திலும், வைணவத்திலும்
ஈடற்ற சிறப்புடைய
'நாயன்மார்கள்', 'ஆழ்வார்கள்' எனப்பட்டனர்.

❇ சைவ நெறியில்
பன்னிரு திருமுறைகளைப் போலவே,
வைணவ நெறியிலும்
உள்ளம் உருக்கும் பாடல்கள்,
'திவ்யப் பிரபந்தமாக' (என் நெஞ்சத்து உள்ளிருந்து)

❇ 'அன்பே தகளியா ஆர்வமே நெய் ஆக
இன்பு உருகு சிந்தை இடு திரியா, நன்பு உருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்'*
என வெளிப் போந்தது.

❇ சைவ சமயத்திற்குப் பெருமை சேர்க்கும் கலைக்களஞ்சியமாகச்
சைவ நாயன்மார்களின்
அருள் வரலாறுகளைக் கொண்டதே
சேக்கிழார் அருளிய 'பெரிய புராணம்'.

❇ வேடர்முதல் வேந்தர் வரை,
வலைவாணர் முதல் கலைவாணர்கள் வரை,
அறுபத்து மூன்று நாயன்மார்களின் பெருமித வரலாற்றை
இந்நூல்,
பக்திச்சுவையோடு பாடிக் காட்டுகிறது.

❇ மனிதராய்ப் பிறப்பது அரிது!

---

* நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் - 2182. ஸ்ரீ பூதத்தாழ்வார் அருளிச் செய்த, இரண்டாம் திருவந்தாதி பா-1

❈ அவ்வாறு பிறந்தாலும்,
ஊனமில்லாத மனிதனாகப் பிறப்பது அரிது!

❈ அப்படியிருந்தாலும்,
மனிதருள்ளும்,
ஆடவராய்ப் பிறப்பது அரிது!

❈ ஆடவரிலும்,
அந்தணராய்ப் பிறப்பது அரிது!

❈ அந்தணரிலும்,
வேதம் வல்லவனாகப் பிறப்பது அரிது!

❈ அவனே முத்தி பெறுவான் என்பது,
'ஆதிசங்கரர்' அருளிய தோத்திரப்பாடல்.

❈ வேதம் வல்ல வேதியரைத் தவிர
வேறெவர்க்கும், அருள்நிலை வாய்க்காது என்று
அவர் நினைத்தார்!

❈ ஆனால்,
வேடன் ஒருவன், பக்தியால் உருகி
வேதியரும் வியக்குமாறு
காளத்தியில் அருள் பெற்றான் என்பது
பெரிய புராணம்!

❈ எந்த ஜாதி வேறுபாடும்,
எள்ளளவும் கொள்ளாமல்,
இந்த நாட்டவரே அன்றி
எந்த நாட்டவரும்,
அருளாளர்களாக இருந்தால்
அவர்களும் 'நாயன்மார்களே' என்பது,
சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்.

❈ இதனை,
ஒரு 'புரட்சிப்புராணம்' என்றே கூறலாம்!

❈ தேனென, பாலென, தெவிட்டாத
தீங்கனிச் சாறென, கரும்பின் சுவையென,
செந்தமிழ் உரையாற்றும்
சிவம்பெருக்கும் சீலர்,
பேராசிரியர் இரா. செல்வக்கணபதியின் இவ்வுரைகள்,
உன்னும்தோறும்,
உள்ளத்தை உருக்குவனவாகும்.

❇ பெரியபுராண நாயன்மார் அருள்வரலாறுகளைத்
தனித்தனியே, உரைநடையில்,
ஒலியிழைகளாக்கி
உலகெங்கும் பரப்பி வரும் பேராசிரியர்
செந்தமிழ் வாரிதி
டாக்டர். இரா. செல்வக்கணபதி அவர்கள்,
அயலகத்தே வாழும்
தமிழ் மக்களும் கேட்டுணருமாறு,
'குறுந்தகடுகள்' எனப்படும் சி.டி.க்களாக
வடிக்கும்
அரிய முயற்சியை மேற்கொண்டிருப்பது
பெரிதும்,
வரவேற்கத் தக்கதும்
பாராட்டத் தக்கதும் ஆகும்!

❇ நாற்பது குறுந்தகடுகளில்,
அறுபத்து மூன்று
நாயன்மார்கள் அருள் வரலாறுகளையும்,
ஆங்கில வரலாற்றுச் சுருக்கத்தையும்,
திருமுறைப்பாடல்களையும் இணைத்து
இனிய-எளிய-தமிழில்
பேராசிரியர் அவர்கள் வெளிக்கொணர்வது,
பெரிதும் போற்றத்தக்கது!

❇ பேராசிரியர் அவர்களின் இம்முயற்சிக்கு
உதவும் வாய்ப்பும்,
இக்குறுந்தகடுகளுக்கு
'அறிமுகவுரை' கூறும் வாய்ப்பும்
அளவிலா மகிழ்ச்சியைத் தருகின்றன.

❇ உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள்,
இவ்வொலிக் களஞ்சியங்களைச்
செவியாரக் கேட்டு மகிழவும்,
சிவமணம் கமழும்
திருநெறியின் திறமுணர்ந்து சிறக்கவும்
அன்புடன் வேண்டுகின்றேன்!

❇ 'செல்வக்கணபதி என்னும் போதினிலே
நல்ல தேன் வந்து பாயுது காதினிலே'
என்று வாழ்த்தி மகிழ்கிறேன்!

திரு. இராமநாதன் பழனியப்பன், B.E.,

நிறுவனர், தலைவர்
சென்னை ஆன்மிக இலக்கிய வட்டம்

- ❉ பெரிய புராண நாயன்மார் அருள் வரலாற்றுக் குறுந்தகடுகளுக்கு, ஆங்கில - வரலாற்றுச் சுருக்க உரை வழங்கியவர். திரு. இராமநாதன் பழனியப்பன்.
- ❉ பொறியியல் பட்டதாரியான இவர் பிரபல தொழிலதிபர். செல்வின்ட்ஸ் குழு தொழில் நிறுவனங்களின் தலைவர். செட்டிநாடு சிமின்ட் கார்பரேஷன் லிமிடெட் மற்றும் ப்ரோடக்டிவிடிஎலிமண்ட்ஸ், பி. லிமிடெட் நிறுவனங்களின் இயக்குநர்.
- ❉ சென்னை ஆன்மிக இலக்கிய வட்டத்தின் நிறுவனர் - தலைவர்.
- ❉ முத்தமிழ் வளர்ச்சிக்கு மூதாதையர் காலந்தொட்டு, முன்னின்று உழைத்து வரும் நாட்டுக் கோட்டை நகரத்தார் மரபில் வந்தவர். பொன் புதுப்பட்டி என்ற ஊரினர்.
- ❉ ஆன்மிகத்திலும் இலக்கியத்திலும் பற்றுள்ள தமிழ் ஆர்வலர். திருக்குறள், பன்னிரு திருமுறை, நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், அபிராமி அந்தாதி முதலிய நூல்களில் ஈடுபாடும் பயிற்சியும் மிக்கவர்.
- ❉ தமிழில் உள்ள இலக்கியம் மற்றும் ஆன்மிகச் செல்வங்களை, ஆங்கில மொழியில் ஆக்கித்தரவேண்டும் என்ற பெரு விருப்பினர்.
- ❉ எளிய-இனிய தமிழில், திருக்குறள், முத்தொள்ளாயிரம், அபிராமி அந்தாதி, நாயன்மார் வரலாறுகள் குறித்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் தொடர் விரிவுரைகள் ஆற்றிவருபவர்.
- ❉ டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்களைக் கொண்டு, கோளறு திருப்பதிகப் பனுவல்களுக்கு விரிவான விளக்கவுரை கண்டு, ஒலிப்பேழைகளாக்கி உபகரித்தவர்.
- ❉ பத்திமையும், பண்பாடும் மிக்க, தனிமனிதப் பண்பில் தலைநிற்கும் சால்பினர்.

இல்லத்து முகவரி :
ஸ்ரீ புவனேஸ்வரி,
3362-AX, 11வது மெயின் ரோடு,
அண்ணா நகர் மேற்கு,
சென்னை - 600 040, இந்தியா
✆ 0091-44-2625 0408, 2621 1194
கணினி இணைப்பு : rpal@sellvindsgroup.com

"தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை"
"SAINT SEKKIZHAAR HUMAN RESOURCE DEVELOPMENT CHARITABLE TRUST"

(Registered No. 1105/04)

OFFICE OF THE TRUST: H-15/2 KARIKALAN STREET, KALASHETRA COLONY, BESANT NAGAR, CHENNAI - 600 090, TAMILNADU, INDIA

Phone : 0091-44-24916888, Cell : 94440-21113, E-mail:nayanmar_63@yahoo.co.in

மனிதகுல வளர்ச்சி நோக்கில் - நல்லறப் பணிகளைத் திட்டமிட்டு இவ்வறக்கட்டளை நிகழ்த்தி வருகிறது.

இதன் ஒரு அங்கமாகிய 'அருண் ஆடியோஸ்' வழி, தற்போது, சாதி-பேதமற்ற மனித குல பெருமை காணவிழைந்த, தெய்வச் சேக்கிழாரின் பெரியபுராண நாயன்மார் அருள் வரலாற்று ஒலிக்களஞ்சியங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எதிர்காலத் திட்டங்கள்

1. சைவ-சமயக் கலைக் களஞ்சியம் தயாரித்து வெளியிடுதல்.
2. பெரிய புராண ஒளி நெறி மற்றும், ஆய்வடங்கல் தொகுத்து வெளிக் கொணர்தல்.
3. பெரிய புராணத்தை - சரியான வடிவில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, CDக்களாக வெளிக் கொணர்தல்.
4. பெரியபுராணச் செம்பதிப்பு ஒன்றை ஆக்கி அளித்தல்.
5. ஒலி-ஒளிக் கூறுகளுடன், பெரியபுராணத்திற்கென வெப்சைட் ஒன்றை அமைத்தல்.

அறக்கட்டளைக்கு வழங்கும் நன் கொடைகளுக்கு
வருமானவரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

Approval Under S.80G(5) (vi) Of the I.T. Act, 1961-DIT(E)
No2 (423)/04-05 Date 18-04-05

அருண் ஆடியோஸ் வழி இதுவரை 15 நாயன்மார் அருள் வரலாற்று ஒலிப்பேழைகள் வெளிவந்துள்ளன. மேலும், 1. மாணிக்கவாசகர், 2. அருணகிரிநாதர், 3. பெருமைமிகு பிள்ளையார், 4. கனக துர்க்கை, 5. அன்னை அபிராமி, 6. தெய்வச்சேக்கிழார் ஒலிப்பேழைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

பெரிய புராணம்

செந்தமிழ் வாரிதி

முனைவர். இரா. செல்வக்கணபதி

முன்னுரை

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில், நிறைவாக அமைந்திருப்பது பெரிய புராணம். இதனைத் திருத்தொண்டர் புராணம் என்றும், திருத்தொண்டர் மாக்கதை என்றும் சொல்வர். இதன் ஆசிரியர் சேக்கிழார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு, பெரிய புராணம் ஒரு பெருங்காப்பியமாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு (02) காண்டங்களையும், பதின்மூன்று (13) சருக்கங்களையும், நாலாயிரத்து இருநூற்று எண்பத்தேழு (4287) விருத்தப்பாக்களையும் இந்நூல் கொண்டுள்ளது. அறுபத்துமூன்று (63) தனியடியார் வரலாறுகளும், ஒன்பது (9) தொகையடியார் சிறப்புக்களும் இந்நூலுள் விரித்துரைக்கப் பட்டுள்ளன. சமய - சமூக - பண்பாட்டு வளர்ச்சியில், இந்நூல் ஆற்றியிருக்கும் பெரும்பங்கு இங்கே விரித்துரைக்கப்படவுள்ளது.

நூலாசிரியர் - சேக்கிழார்

பெரிய புராண நூலாசிரியர் சேக்கிழார், தொண்டை நாட்டில் குன்றத்தூரிற் பிறந்தவர். இவர் வேளாளர் குலத்தில், 'சேக்கிழார்' என்ற குடியில் வந்தவர். இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பது. இவர், அநபாயன், அபயன், திருநீற்றுச் சோழன் முதலிய பட்டப்பெயர்களை உடைய, இரண்டாம் குலோத்துங்க சோழன் அவையில் முதல் அமைச்சராகத் திகழ்ந்தார். சோழன், இவருக்கு, உத்தம சோழப்பல்லவன் என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்தான். அக்காலத்தில், திருத்தக்க தேவர் இயற்றிய, சீவக சிந்தாமணி என்ற சமண காவியத்தில், சோழன் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான். மன்னனைச் சைவ நாட்டம் உடையவனாக மாற்ற, சிவனடியார் வரலாறுகளைச் சேக்கிழார் அவ்வப்போது எடுத்துரைத்து வந்தார். சோழன் அவற்றை விரும்பிக்கேட்டு மகிழ்ந்து, சைவ அடியவர்கள் வரலாற்றைத் தொகுத்து, ஒரு காப்பியம் இயற்றித் தருமாறு சேக்கிழாரைக் கேட்டுக் கொண்டான்.

தொண்டர்சீர் பரவுவார்

சேக்கிழார் சோழமன்னனின் வேண்டுகோளை ஏற்றுத் தில்லைக்குச் சென்று நடராசப் பெருமானை வணங்கிநின்றார். தில்லை அம்பலவன், 'உலகெலாம்' என்று சேக்கிழாருக்கு அடி எடுத்துக் கொடுத்தான். அதனையே முதலாகக்கொண்டு,

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

என்ற வாழ்த்தை முதலாக அமைத்துக் கொண்டு 'திருத்தொண்டர் புராணத்'தை இயற்றினார். சோழன் முன்னிலையில், இந்நூல், தில்லையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. நிறைவில், சோழன், சேக்கிழாரையும், பெரியபுராணத்தையும் யானை மீது ஏற்றி, தானும் பின் இருந்து கவரி வீசி, நான்கு வீதிகளிலும் ஊர்வலமாக அழைத்துச் சென்று பெருமை சேர்த்தான். தொண்டர் சீர் பரவுவார் என்ற பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தான். சேக்கிழார் தில்லையிலேயே தவம் இருந்து, கூத்தப்பிரான் தாள் மலர்களில் கலந்தார். இவர் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்பர்.

சேக்கிழார் புராணம்

சேக்கிழார் வரலாற்றையும், பெரியபுராணத் தோற்றத்தையும் விரித்துரைக்கும் செய்யுள் நூல் ஒன்று தமிழில் உள்ளது. இந்நூலுக்குச் சேக்கிழார் புராணம் என்று பெயர். இதனை, திருத்தொண்டர் புராண வரலாறு என்றும் கூறுவர். இதனைத் தில்லை உமாபதி சிவாச்சாரியார் என்பவர் இயற்றியதாகக் கூறுவர். இந்நூலுள் 103 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலில்,

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி
ஒல்லை அவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி

(சேக்கிழார் புராணம் - பாடல் 7)

(தொல்லை-பழமை, ஒல்லை-முன்னர், மலி-நிறைந்த)

என்ற பாடல் சேக்கிழார் வாழ்த்தாக அமைந்துள்ளது. சேக்கிழார் பெருமையையும், பெரியபுராணச் சிறப்புக்களையும் விரித்துரைக்கும் சில நூல்கள் பிற்காலத்தில் தோன்றின. அவற்றுட் குறிப்பிடத்தக்க ஒன்று, சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்பது. இதன் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. இவர் சேக்கிழாரை,

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப்
பாடிய கவி வலவ

என்று போற்றிப் புகழ்ந்து விளித்துள்ளார்.

பெரிய புராணம்

தமிழிலே பெருங்காப்பிய இலக்கணம் பெறும் சிறந்த நூல்கள் இல்லை. இருக்கும் ஒன்றிரண்டு நூல்களும், வடமொழிக்காப்பியப் போக்கைக் கருத்திற்கொண்டு இயற்றப்பட்டு உள்ளன. என்றாலும், அவை பெரும் காப்பிய இலக்கணங்கள் பலவும் கொண்டதாகப் பெரியபுராணம் இயற்றப்பட்டுள்ளது. பெரிய புராணத்தின் முதல் நூல், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை என்பது முன்னரும் கூறப்பட்டது. எனவே, சிவனடியார் வரலாறுகளைத் தொகுத்துத் தந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையே காப்பியத் தலைவராகச் சேக்கிழார் கொண்டுள்ளார். காப்பியத்தின் முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்தும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறுகளை விரித்துரைத்து, இடையிடையே அவரால் போற்றி வணங்கப்பட்ட அடியவர்கள் வரலாறுகளையும் விளக்கி வரைந்து, மிக நுட்பமாக இப்பெருங்காப்பியத்தைச் சேக்கிழார் படைத்தளித்துள்ளார். காப்பியக் கதையைக் கயிலாயத்திலே தொடங்கி, மீண்டும் கயிலாயத்திற் கொண்டுபோய் நிறைவிக்கும் அருமை சேக்கிழாரின் காப்பியப் புனைவிற்குச் சான்று கூறி நிற்கிறது.

காப்பியப் பகுப்பு

பெரிய புராணம் காப்பிய இலக்கணங்களுக்கு ஏற்ப, முதற்காண்டம், இரண்டாம் காண்டம் என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளது. பெருங்காப்பியங்களின் உட்பிரிவுகளுக்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. சேக்கிழார், 'சருக்கம்' என்ற சொல்லைப் பயன் கொண்டுள்ளார். முதற்காண்டத்தில் ஐந்து(5) சருக்கங்களும், இரண்டாம் காண்டத்தில் எட்டு(8) சருக்கங்களும் இடம் பெற்றுள்ளன. திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ள பதினொரு(11) பாடல்களினதும் தொடக்கமே, சருக்கங்களுக்குப் பெயராகச் சூட்டப்பட்டுள்ளன. உதாரணமாகத் திருத்தொண்டத் தொகையின் முதற்பாடல், தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று தொடங்கி யுள்ளதால், அப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியார் வரலாறுகளை விரித்துரைக்கும் பகுதிக்குத் தில்லைவாழ் அந்தணர் சருக்கம் என்றே ஆசிரியர் பெயர் சூட்டியுள்ளார். முதற் சருக்கமாகக் கயிலாய மலைச் சிறப்புரைக்கும் திருமலைச் சருக்கத்தையும், இறுதியாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலாயம் சென்றடைந்த செய்திகளைக் கூறும் வெள்ளானைச் சருக்கத்தையும் அமைத்துக் கொண்டு, திருத்தொண்டத் தொகைப் பாடல்களை முதன்மையாகக் கொண்ட பதினொரு சருக்கங்களையும் இடையில் வைத்துச் சேக்கிழார் அற்புதமாகக் காப்பியக் கட்டமைப்பைச் செய்துள்ளார்.

யாப்பமைதி

சேக்கிழாரின் பெரியபுராணம் முழுவதும் அக்காலத்தில் பெருவழக்கில் இருந்த யாப்பு முறைகளையே பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. கீழ்வரும் பட்டியல் கொண்டு பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ள பல்வகை யாப்பு வகைகளையும், அந்த அந்த யாப்பில் அமைந்துள்ள பாடல் தொகைகளையும் தெரிந்து கொள்ள முடியும்.

வ.எ.	யாப்பு வகை	பாடல் தொகை
1.	அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	1805
2.	எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்	75
3.	எண்சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	280
4.	தரவு கொச்சகக் கலிப்பா	1207
5.	கலி நிலைத்துறை	545
6.	கலி விருத்தம்	368
7.	வஞ்சிவிருத்தம்	6
	பாடல்கள் மொத்தம்	4286

இதில் பெரிய புராணத்தின் நிறைவில் இணைக்கப்பட்டுள்ள 'வையம் நீடுக' என்ற பாடல் சேர்க்கப்படவில்லை. மேற்கண்ட அட்டவணை, சமயக் காப்பியம் பாடுவதற்கும், பக்திச் சுவையை நிலைநாட்டுவதற்கும் விருத்தப்பாக்களும், கலிப்பாக்களும் சிறந்த யாப்பு முறைகள் என்பதை அறிவிக்கிறது.

திருமலைச் சருக்கம்

பெரிய புராணத்தின் முதற்பகுதியாகிய திருமலைச் சருக்கம்(1) பாயிரம், (2) திருமலைச் சிறப்பு, (3) திருநாட்டுச் சிறப்பு, (4) திருநகரச் சிறப்பு, (5) திருக்கூட்டச் சிறப்பு, (6) தடுத்தாட் கொண்ட புராணம் என்ற ஆறு உட்பகுதிகளையும், 344 பாடல்களையும் கொண்டு நடையிடுகிறது. காப்புப் பகுதியில் முதல் இரண்டு பாடல்கள் தில்லைக் கூத்தனையும், 'எடுக்கும் மாக்கதை' என்று தொடங்கும் மூன்றாவது பாடல் விநாயகனையும் வணங்குவதாக அமைந்துள்ளன. காப்புப் பகுதியில் அடியார் திருக்கூட்டம் விளக்கம் பெற ஒரு பாடலும், அவையடக்கப் பகுதியில் ஐந்து பாடல்களும், நூற்பெயர் கூறும் பாடல் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

இங்கிதன் நாமம் கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்குகின்ற
செங்கதிரவன் போல்நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்

(பெரியபுராணம் - 10)

என்னும் பாடல் இந்நூற் பெயரைப் பதிவு செய்கிறது.

பெரியபுராணம் - காப்பு

காப்புப் பகுதியில் விநாயகர் வாழ்த்தில் 'எடுக்கும் மாக்கதை' என்ற ஒரு தொடர் வருகிறது. மா என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பெரிய என்பது பொருள். எனவே, மாக்கதை என்ற தொடருக்குப் பெருங்கதை என்று பொருள் கொண்டிருக்கலாம். முன்னரே தமிழில் பெருங் கதை என்ற ஒரு நூல் இருப்பதால், இதனை வேறுபடுத்தி அறிவதற்குப் பெரிய புராணம் என்று இந்நூலை முன்னோர் அழைத்திருக்கலாம். அவையடக்கத்தில் அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் என்ற ஒரு தொடர் வருகிறது. 'பெருமையர்' என்ற சொல் பெருமை மிக்கவர், பெரியார் என அழைக்கப்பட்டு, பெருமைமிக்க அடியார் வரலாறு என்ற பொருளில் பெரியபுராணம் என்றும் அழைக்கப் பட்டிருக்கலாம். செயற்கரிய செயல் செய்தவர்களைத் திருவள்ளுவர் 'பெரியர்' என்கிறார். நாயன்மார் வரலாற்றில் பலரும் செயற்கரிய செயல் செய்தவரே ஆவர். சேக்கிழாரும் பல இடங்களில் அடியார் செயல்களைச் செயற்கரிய செயல் என்று குறிப்பிட்டுள்ளார். அது பற்றியும், பெரிய புராணம் என்ற பெயர் அமைந்திருக்கலாம்.

திருமலைச் சிறப்பு

திருமலைச் சிறப்பில் கயிலாயமலையின் இயற்கை எழிலும், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருவோலக்கமும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. உபமன்யு முனிவர் சீடர்களுக்குச் சுந்தரர் வரலாறு உரைக்கும் போக்கில், காப்பியமும் இங்கேயே தொடங்கிவிடுகிறது. காப்பியநாயகர் பெருமையை,

தம்பிரானைத் தன் உள்ளம் தழீஇயவன்
நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையன் (29)

என்று உபமன்யு முனிவர் கூற்றாகச் சேக்கிழார் பதிவு செய்கிறார். ஒரு காதலால், தென்தமிழ் நாடு, அடியவர் பெருமை அறிந்து மகிழும் பேறு பெற்றது என்பதனை,

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்
போதுவான் அவர்மேல் மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார் (35)

எனச் சேக்கிழார் காப்பிய நுட்பமும், நயமும் தோன்றக் குறித்துக் காட்டுகிறார்.

திருநகரச் சிறப்பு

பெருங்காப்பியங்களில் காப்பியத் தலைவன் பிறந்த நாட்டையும், நகரத்தையும் சிறப்பித்தல் மரபு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிறந்த நாடு திருமுனைப்பாடி நாடு. நகரம் திருநாவலூர். ஆனால் சேக்கிழார் அவற்றைப் புனைந்து பாடாது, சோழ நாட்டையும், திருவாரூரையும் புனைந்து போற்றுகிறார். இதற்கான காரணம் தெளிவாகப் புலப்படவில்லை. தம்மை ஆதரித்துப் பெரிய புராணம் பாடச் செய்த, சோழர்கள்பாற் கொண்ட நன்றி உணர்ச்சியால் இவ்வாறு பாடியிருக்கலாம். அல்லது, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகையின் நோக்கமாக அமைந்த திருத்தொண்டத் தொகை பிறந்த ஊர் திருவாரூர் என்பதால், அதனையும், சோழ நாட்டையும் சேக்கிழார் பாடியிருக்கலாம். இரண்டாவது காரணமே சேக்கிழாருக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும். நகரப் பெருமை கூறும் 'நகரச்சிறப்பு' என்ற பகுதியில், மனுநீதிச்சோழன் வரலாற்றைச் சேக்கிழார் விரித்துப் பாடியுள்ளார். இதற்கான உண்மைக் காரணமும் தெரியவில்லை.

திருக்கூட்டச் சிறப்பு

முதற் சருக்கத்தில் இடம் பெற்றுள்ள திருக்கூட்டச் சிறப்பில், சைவ அடியார்களின் அளவற்ற பெருமைகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. சைவ அடியார்கள் புறத் தூய்மையும், அகத் தூய்மையும் மிக்கவர்கள் என்பதை, பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்(141) என்றும், அன்னார் இன்ப துன்பங்களில் பாதிப்போ, பொன் பொருள்களில் நாட்டமோ இல்லாதவர்கள் என்பதனை,

> கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
> ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
> கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
> வீடும் வேண்டா விறலின் விளங்கினார் *(143)*

என்றும், அடியவர்தம் அக, புறத்தூய்மைகளை,

> *ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே*
> *பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலர்*
> *ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்*
> *வீரம் என்னால் விளம்பும் தகையதோ (144)*

என்றும் சேக்கிழார் இனங்காட்டிப் பெருமை சேர்க்கிறார்.

(ஆக்கம்-செல்வம், ஒக்கவே-ஒன்றாகவே, ஆரம்-கழுத்தில் அணியும் அணிகலன், பாரம்-சுமை-இங்கே கடமை)

தடுத்தாட் கொண்ட புராணம்

முதற் சுருக்கத்தின் ஆறாவது பகுதி தடுத்தாட் கொண்ட புராணம். பெரியபுராணத்தின் மிக உன்னதமான பகுதி இது என்று கூறலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதாரம் தொடங்கி, திருத்தொண்டத் தொகை பாடப்படும் வரை இப்பகுதி இருநூற்று மூன்று (203) பாடல்களில் நடையிடுகிறது. பெருங்காப்பியங்களில் இடம் பெறவேண்டிய பல பகுதிகள், இப்புராணப்பகுதியில் அற்புதமாக இடம் பெறச் செய்யப்பட்டுள்ளன. இயற்கை வருணனைகளும் அழகிய கற்பனைகளும் இங்கே இடம் பெற்றுள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அவதாரம், திருவெண்ணெய் நல்லூர் அரசன் நரசிங்கமுனையரையன் சுந்தரரை அரண்மனையில் அன்பு பாராட்டி வளர்த்தமை; புத்தூர், சடங்கவி சிவாச்சாரியார் மகளை மணம் பேசியமை; திருமணத்தில் சிவபெருமான் முதிய வேதியராய் எழுந்தருளி ஓலைகாட்டித் திருமணத்தைத் தடுத்துச் சுந்தரரை ஆட்கொண்டமை; திருவெண்ணெய் நல்லூர்ச் சிவாலயமாகிய திருவருட்டுறையில் சிவபெருமான் மறைந்து, தம்மைப்பாடுமாறு பணித்தமை; எவ்வாறு பாடுவது என்று சுந்தரர் திகைத்து நின்றபோது, 'பித்தா' என்று அடி எடுத்துக் கொடுத்துப்பாடுமாறு செய்தமை என்றெல்லாம், நிகழ்வுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்

என்ற அழகிய, தமிழ் மொழியின் சிறப்புரைக்கும், இறைமை சார்ந்த மொழிகளும், முன்பு எனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே, என் பெயர் 'பித்தன்' என்றே பாடுவாய் என்ற திருவருட் குறிப்பு மொழிகளும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

பரவையார் திருமணம்

மேலும் தலயாத்திரை மேற்கொண்ட சுந்தரர் திருத்துறையூரில் தவநெறி அருளப் பெற்றதும், திருவதிகை எல்லைப் பகுதியில் சிவன் திருவடி சூட்டப் பெற்றதும், தில்லைச் சிற்றம்பலவனை வணங்கிப் பேரின்ப வெள்ளத்துள் திளைத்ததும், தோணிபுரத்தில் (சீகாழி) இறைவன் திருக்காட்சி காட்டக் கண்டு மகிழ்ந்ததும், திருவாரூரில் இறைவன் தம்மைச் சுந்தரருக்குத் தோழமையாகத் தந்ததும், சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என அழைக்கப்பெற்றதும், இறைவனின் முன்னைய விதிப்பால் திருவாரூரில் உருத்திரகணிகையர் குலத்திற் பிறந்திருந்த பரவையாரைக் கண்டு ஆரூர்ப் பெருமான் அருளின் துணையோடு அவரை மணந்து மகிழ்ந்ததும் இப்பகுதியில் நிரல்பட விரித்துரைக்கப்பட்டுள்ளன. இன்பத்திலே திளைக்கும் போதும், அதிலிருந்து விடுபட்டு நீங்கி நிற்பதும், துன்பத்திலே துவளும் போதும் அதனால் பாதிப்படையாது நெஞ்சுறுதி கொண்டு நிமிர்வதும் சிலருக்கே வாய்க்கும். பரவையாரோடு இன்பம் துய்த்த காலத்தும்

சுந்தரர், அவ்வின்பத்தில் திளையாது யோகநெறி நின்றார் என்ற அரிய குறிப்பு இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

'... பரவை என்னும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலை ஓங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார்' (32)

(ஓங்கல்-மலை, குவடு-குன்று, யோகம்-நால்வகை இறைநெறிகளில் ஒன்று)

திருத்தொண்டத் தொகை

திருவாரூரில் வாழ்ந்துவரும் நாளில், திருக்கோயில் முன்பகுதியில் அமைந்திருந்த தேவாசிரியன் மண்டபத்தில், சிவனடியார் பலர் கூடியிருக்கக் கண்ட சுந்தரர், தாம் அன்னாருக்கு அடிமை பூண வேண்டும் என்று விரும்பினார். திருவாரூர் இறைவன் சிவனடியார்களின் பெருமைகளை அசரீரியாக எடுத்துரைத்தான்.

பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கலந்து நின்றார் இவரைநீ அடைவாய் (342)

என்று, அடியவர் பெருமையை இறைவன் எடுத்துக் கூறக் கேட்ட சுந்தரர் மகிழ்ந்தார். இறைவன், 'அடியார் பெருமைகளை விரித்து நீபாடுக' என்று ஆணையிட்டு, 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடி எடுத்தும் கொடுத்து அருளினார். சுந்தரர், சிவன் அருட் கட்டளையை ஏற்றுப் பதினொரு (11) பாடல்களால் அடியவர் பெருமை கூறும், வரலாற்றுச் சிறப்புமிக்க, திருத்தொண்டத் தொகை என்ற பதிகத்தைப் பாடி வழங்கினார். அதில் முன் குறித்தவாறு அறுபது (60) தனியடியார்கள் மற்றும், ஒன்பது (9) தொகையடியார்கள் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. அவ்வடியார் வரலாற்றை இனி நான் விரித்துரைப்பேன் என்று கூறிச் சேக்கிழார், நாயன்மார் வரலாறுகளை இரண்டாவது சருக்கம் முதலாக விரித்துரை செய்துள்ளார்.

பெண் அடியார்கள்

திருத்தொண்டத் தொகையில் ஆண் அடியார்கள் ஐம்பத்தெட்டு (58) பேரும், பெண் அடியார்கள் இருவரும் இடம்பெற்றுள்ளனர். சேக்கிழார், காப்பிய நாயகராகிய சுந்தரர், அவர் தந்தை சடையனார், தாயார் இசைஞானியார் ஆகிய மூவரையும் இணைத்து, நாயன்மார் தொகையை அறுபத்து மூன்று (63) ஆக உயர்த்தியுள்ளார். பெண் அடியவர்கள் மூவருள் இசைஞானியார் வரலாறு சுந்தரர் வரலாற்றுடன் இணைந்து வந்துவிடுகிறது.

மங்கையர்க்கரசியார் வரலாறு திருஞான சம்பந்தர் வரலாற்றுள் விரித்துரைக்கப்பட்டு விடுகிறது. எனவே, இவ்விருவர் வரலாறுகளும் தனியே மிகச்சுருக்கமாகவே பாடி அமைக்கப்பட்டுள்ளன. காரைக்கால் அம்மையார் வரலாறு ஒன்று மட்டுமே அறுபத்தாறு (66) பாடல்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. திருத்தொண்டத் தொகையில் இடம் பெறாது, அடியவர்கள் அருள் வரலாற்றில் இடம்பெற்றுள்ள திலகவதியார், திருவெண்காட்டு நங்கை, கமலவதி முதலாகிய பல பெண்களும், இந்நூலுள் பெரிதும் போற்றப்பட்டுள்ளனர். பெரிய புராணத்துள் இடம் பெற்றுள்ள மதிப்புமிக்க பெண்களைச் சேக்கிழார் 'அவள்', 'வந்தாள்' என்ற பெண் பால் மொழிகளை விடுத்து, 'அவர்', 'வந்தார்' என்று பலர் பால் விகுதிகளாற் போற்றியிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

தொகை அடியார்கள்

இவர், இன்னார் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலா வேறுபலரையும், தம் காலத்துக்கு முன்பும், தம் காலத்தும், பின்பும் வாழ்ந்தவர்களையெல்லாம் போற்றும் நோக்கில், தொகையடியார் வணக்கத்தைச் சுந்தரர் மேற்கொண்டுள்ளார். வரலாற்று எல்லைக்குள் உட்படாதவர்களையும், வரலாற்றுப் பார்வையில் கிட்டாதவர்களையும் சிறப்பிக்கும் சுந்தரரின் இப்பண்பு பெருஞ்சிறப்புக்கு உரியது. நால்வரில் ஒருவராகிய மாணிக்கவாசகர் பெயர் திருத்தொண்டத் தொகையில் இடம்பெறவில்லை. காரணம் அவர் சுந்தரர் காலத்துக்குப் பின் வந்தவராதல் வேண்டும். இவ்வாறான தொகையடியார்களை அறிந்து கொள்வது பயனுடையதாக அமையும்.

வ.எ.	தொகையடியார்	பாடல் தொகை
1.	தில்லைவாழ் அந்தணர்	10
2.	பொய்யடிமை இல்லாத புலவர்	3
3.	பத்தராய்ப் பணிவார்கள்	8
4.	பரமனையே பாடுவார்	2
5.	சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்	1
6.	திருவாரூர்ப் பிறந்தார்	2
7.	முப்போதும் திருமேனி தீண்டுவார்	3
8.	முழுநீறு பூசிய முனிவர்	6
9.	அப்பாலும் அடிச்சார்ந்தார்	2
	பாடல்கள் மொத்தம்	37

தனி அடியார்கள்

பெரிய புராணப் பெண் அடியார்கள், மற்றும் தொகை அடியார்கள் அறிமுகத்திற்குப் பின்னர், ஆண் அடியவர்கள் வரலாறுகளைக் காணலாம். இரண்டாவது சருக்கம் தொடங்கி வரும் சருக்கங்களில் அறுபது (60) ஆண் அடியார்களின் வரலாறுகளும், திருத்தொண்டத் தொகை வரிசையில் விரித்துரைக்கப் பட்டுள்ளன. தமிழ் மொழியில் அமைந்த பிற புராணங்கள் பலவும், வரலாற்று நோக்கில் அமைந்தன அன்று. சேக்கிழார், வரலாற்றுத் தரவுகளை, நாடு முழுதும் சென்று நேரில் கண்டு, திரட்டி, முறைப்படுத்திக் கொண்டு, இந்நூலை ஒரு வரலாற்றுப் பெருங்காப்பியமாகவே படைத்துள்ளார். இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், செவிவழிச் செய்திகள் யாவும் அவரால் உற்று நோக்கி அறியப்பட்டுள்ளன. நன்கு அறிந்து தெளிந்த உண்மைகளை மட்டுமே, இவர் பதிவு செய்கிறார். கற்பனைப் பதிவுகளில் இவருக்கு நாட்டம் இருந்திருக்கவில்லை. பூகோள அறிவும், காலக்கணக்குகளும், நில இயல்புகளும், இயற்கை அமைப்புக்களும் மிகத் துல்லியமாக இந்நூலுள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, பெரிய புராணத்தை ஒரு வரலாற்றுக் காப்பியமாகக் கொள்ள முடிகிறது.

நாயன்மார் குலமரபு

திருஞானசம்பந்தர் அருள் வரலாறே இந்நூலுள் அதிகப் பாடல்களால் விரித்துரைக்கப் பட்டுள்ளது. மொத்தம் 4287 பாடல்களில், திருஞானசம்பந்தர் புராணம் மட்டும் 1256 பாடல்களால் பாடப்பெற்றுள்ளது. திருநாவுக்கரசர் வரலாறு 429 பாடல்களால் நடையிடுகிறது. ஏனைய வரலாறுகள், கிடைத்திருக்கும் செய்திகளின் அளவிற்கு ஏற்ப, விரித்தும் சுருக்கியும் பாடப் பெற்றுள்ளன. நாயன்மார்கள், அக்காலத்தில் நிலவிய பல்வேறு குலங்களையும், சாதிகளையும் சார்ந்தவர்கள். சைவம் என்ற ஒரு பெரிய வட்டத்துள், சாதி வேறுபாடுகள் கருதாது மனித குலத்தை ஒருங்கிணைக்கும் அரிய முயற்சி, பெரிய புராணத்துள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அடியவர்களுள், வேளாளர் 13, அந்தணர் 12, முடியரசர் 6, மரபு இன்னது என்று தெரியாதவர் 6, குறுநில மன்னர் 5, வணிகர் 5, ஆதிசைவர் 4, இடையர் 2, ஏனைய குலத்தோர் 10. இவர்கள் சோழநாடு, நடுநாடு, தொண்டை நாடு, பாண்டி நாடு, மலைநாடு, கோனாடு, மழநாடு என்ற பலபகுதிகளைச் சேர்ந்தவர்கள். இன்னநாட்டினர் என்ற குறிப்பு ஒன்பது (9) அடியவர் வரலாறுகளில் இல்லை.

பெரியபுராண அடியவர்கள் வரலாற்றை விரித்துரைக்கும் வாய்ப்பு இங்கு இல்லை. ஆயினும் அவர்கள் பெயர்கள் இன்னது என்று தெரிந்து கொள்வது நலம் பயக்கும். அகர வரிசையில் அவர்கள் பெயர்கள் மட்டும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

1. அதிபத்தர்
2. அப்பூதியடிகள்
3. அமர்நீதி நாயனார்
4. அரிவாட்டாய நாயனார்
5. ஆனாய நாயனார்
6. இசைஞானியார்
7. இடங்கழி நாயனார்
8. இயற்பகை நாயனார்
9. இளையான்குடிமாறர்
10. உருத்திர பசுபதியார்
11. எறிபத்த நாயனார்
12. ஏயர்கோன் கலிக்காமர்
13. ஏனாதிநாத நாயனார்
14. ஐயடிகள் காடவர்கோன்
15. கண்ணப்ப நாயனார்
16. கணம்புல்ல நாயனார்
17. கணநாத நாயனார்
18. கலிக்கம்ப நாயனார்
19. கலியநாயனார்
20. கழற்சிங்க நாயனார்
21. கழறிற்றறிவார்
22. காரி நாயனார்
23. காரைக்கால் அம்மையார்
24. குங்குலியக் கலயர்
25. குலச்சிறை நாயனார்
26. கூற்றுவ நாயனார்
27. கோச்செங்கட்சோழர்
28. கோட்புலி நாயனார்
29. சத்தி நாயனார்
30. சடையநாயனார்
31. சண்டேசுவர நாயனார்
32. சாக்கிய நாயனார்
33. சிறப்புலி நாயனார்
34. சிறுத்தொண்ட நாயனார்
35. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
36. செருத்துணை நாயனார்
37. சோமாசி மாறர்
38. தண்டியடிகள்
39. திருக்குறிப்புத் தொண்டர்
40. திருஞான சம்பந்தர்
41. திருநாவுக்கரசர்
42. திருநாளைப் போவார்
43. திருநீலகண்ட யாழ்ப்பாணர்
44. திருநீலகண்டர்
45. திருநீலநக்கர்
46. திருமூல நாயனார்
47. நமிநந்தியடிகள்
48. நரசிங்க முனையரையர்
49. நின்றசீர் நெடுமாறர்
50. நேச நாயனார்
51. புகழ்ச்சோழ நாயனார்
52. புகழ்த்துணை நாயனார்
53. பூசலார் நாயனார்
54. பெருமிழலைக் குறும்பர்
55. மங்கையர்க்கரசியார்
56. மானக்கஞ்சாற நாயனார்
57. முருக நாயனார்
58. முனையடுவார் நாயனார்
59. மூர்க்க நாயனார்
60. மூர்த்தி நாயனார்
61. மெய்ப்பொருள் நாயனார்
62. வாயிலார் நாயனார்
63. விறன்மிண்ட நாயனார்

காப்பிய உள்ளீடு - நூல்செய்தோர்

பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள தனி அடியார்களுள் சிலர், சைவசமயத்திற்கு அருந்தொண்டுகள் இயற்றியதோடு, தாமே, சைவ சமயம் குறித்துத் தனிப்பாடல்களையும், பதிகங்களையும், சிற்றிலக்கியங்களையும் படைத்தளித்துள்ளனர். கழறிற்றறிவார் என்ற பெயர் கொண்ட சேரமான் பெருமாள் நாயனார் 1. திருவாரூர் மும்மணிக் கோவை, 2. பொன்வண்ணத் தந்தாதி, 3. திரு உலாப்புறம் (திருக்கயிலாய ஞான உலா) என்ற நூல்களைப் படைத்தளித் துள்ளார். காரிநாயனார் என்பவரால், 'காரிக்கோவை' என்ற ஒரு நூல் படைத்தளிக்கப்பட்டதாகச் சேக்கிழார் குறித்துள்ளார். அந்நூல் இன்று கிடைக்கவில்லை. காரைக்கால் அம்மையார் 1. இரட்டைமாலை அந்தாதி (திரு இரட்டை மணிமாலை), 2. அற்புதத் திருவந்தாதி, 3. மூத்த திருப்பதிகம் முதலிய சிறு நூல்களை ஆக்கி அளித்துள்ளார். ஐயடிகள் காமவர்கோன் சேத்திர வெண்பா என்ற பெயரில் சில பாடல்கள் பாடியுள்ளார். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் அருளிய பதிகப் பாமாலைகள் குறித்து முன்னரே

விளக்கப்பட்டுள்ளன. திருமூலர் திருமந்திரமாலை ஆக்கி அளித்துள்ளார். தம் காலத்துக்கு முற்பட்ட இந்நூல்கள் யாவற்றையும் நன்கு ஆராய்ந்து அறிந்தே சேக்கிழார் பெரியபுராணம் பாடியுள்ளார் என்பது நன்கு தெளிவாகிறது.

சைவசமய உண்மைகள்

சைவ சமயம் தொடர்பான பல உண்மைகள் குறித்துப் பெரிய புராணம், விரிவான விளக்கங்களைத் தருகிறது. சைவ சமயத்தில், சிவலிங்க வழிபாடு தொன்மையானது. சிவலிங்கத் திருமேனியின் உண்மை குறித்துச் சேக்கிழார் கூறுவதாவது,

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம் (3648)

சிவலிங்கம் என்பது, உருவமும் அன்று; உருவம் அற்றதும் அன்று. அருவமும் உருவமும் கலந்த ஒரு வழிபாட்டுச் சின்னம் என்று சேக்கிழார் விளக்கம் தருகிறார். சைவத்தில் இறைவனை வீழ்ந்து வணங்கும் முறைகள் இரண்டு உண்டு. அவை; 1. பஞ்சாங்க நமஸ்காரம், 2. அட்டாங்க நமஸ்காரம். இதில் பஞ்சாங்க நமஸ்காரம் என்பது, மண்ணுற ஐந்து உறுப்பால் வணங்கி (270) என்றும், அட்டாங்க நமஸ்காரம் என்பது, அங்கம் மாநிலத்து எட்டுற வணங்கி (2856) என்றும் சேக்கிழாரால் விளக்கப்பட்டுள்ளன. இரண்டு கால், இரண்டு கை, தலை என்பன ஐந்து உறுப்புக்கள். இத்துடன் மார்பு, இரண்டு காதுகள் தோய்வது எட்டு உறுப்புக்கள்.

சிவபெருமான் அருள்திறம்

சைவ சமயக் காப்பியம் என்பதற்கு ஏற்பச் சிவபெருமானின் அடையாளங்களையும், அருட்செயல்களையும், வீர நிகழ்வுகளையும், சேக்கிழார் தம் நூலுள் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

'தன்னை யார்க்கும் அறிவரியான்' (11)

'இன்ன தன்மையன் என்று அறியாச் சிவன்' (23)

'அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு அரியான்' (192)

'அடியார் இடுக்கண்[1] தரியாதார்' (3483)

'எவ்வுயிர்க்கும் தாயானான்' (2385)

'கருச் சுற்றில்[2] அடையாமல் கைதருவார்' (2294)

'அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்ற பிரான்' (4163)

'தொல் உலகம் முழுவதும் அளித்து அழித்து ஆக்கும் முதல்வர்' (3444)

'தேவரையும் மால்[3] அயன்[4] முதல் திருவின் மிக்கோர்

யாவரையும் வேறு அடிமையா உடைய எம்மான்' (183)

'முன்னாகி எப்பொருட்கும் முதலாகி நின்றான்' (141)

'முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயான்' (179)

'புண்ணியப் பொருளாய் நின்றான்' (385)

எனவரும் பெரிய புராணத் தொடர்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

([1]இடுக்கண் - துன்பம், [2]கருச்சுற்று - தாய் வயிற்றில் கருவாகியிருத்தல், [3]மால் - திருமால், [4]அயன் - பிரமன்)

புராண வரலாற்றுக் காப்பியம்

இந்நூலுள் பல புராண வரலாற்றுச் செய்திகளை உள்ளவாறு பதிவு செய்துள்ளார். 1. ஆதித்த சோழன் தில்லை அம்பலத்திற்குப் பொன் வேய்ந்தமை, 2. இமயமலையில் சோழன் புலி இலச்சினை பொறித்தமை, 3. ஒரு காலத்தில் பெண்ணை ஆறு துறையூரின் தெற்கில் ஓடியது. 4. காஞ்சிபுரத்தைக் கரிகாற் பெருவளத்தான் புதுக்கியது, 5. அகத்தியர் காவிரியை வரவழைத்தது, 6. இலக்குமி திருவாரூரில் வழிபட்டது. 7. உபமன்யு முனிவர் கண்ணனுக்குச் சிவ தீட்சை செய்வித்தது, 8. உமையம்மை காஞ்சிபுரத்தில் சிவபூஜை செய்தது, 9. உமையம்மை காஞ்சியில் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தது, 10. சிவபூஜை செய்து பரசுராமன் 'பரசு' ஆயுதம் பெற்றது, இவ்வாறான செய்திகள் மேலும்பல, பெரிய புராணத்துள் இடம் பெற்றுள்ளன.

காப்பிய எழில் - உவமை அழகு

ஒரு பெருங்காப்பியத்திற்குக் கற்பனை, வருணனை, உவமை முதலிய அணிகள் மேலும் அழகு சேர்ப்பன. பக்திக் காப்பியம் என்பதால், சேக்கிழார் உவமைகளில் எல்லாம், பக்தி மணம் கமழக் காண்கிறோம். வஞ்சகத்தை உள்ளத்தில் வைத்துக் கொண்டு, பொய் வேடம் தரித்து வந்தவனை,

மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்து (473)

என்று உவமித்துக் காட்டுகிறார். சிவனடியார் வீரத்திற்கு முன் நிற்கமாட்டாது, புறங்கொடுத்து வஞ்சகப் பகைவன் ஓடுவதை,

கதிரோன் எழ மழுங்கிக் கால்சாயும் காலை
மதிபோல் அழிந்து பொறா மற்றவன் (615)

என உவமித்து மகிழ்கிறார். நல்ல அன்பு நிறைந்த பிள்ளையின் தந்தை, குணமற்றவனாக இருப்பதை விளக்கும் இடத்தில், பாம்பு, மாணிக்கத்தையும் அளித்து, நஞ்சினையும் கக்கும் தன்மைபோல் என்று உவமிக்கிறார். இறைவனைக் கண்டு கண்ணப்பர் விட்டு நீங்காத தன்மையை,

வங்கினைப் பற்றிப் போதா வல்உடும்பு என்ன நீங்கான் (765)

என உடும்பின் தன்மையோடு ஒப்புமை காட்டுகிறார். இவ்வாறான, உலகியல் கலந்த உவமைகள் பல இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

கற்பனைப் புனைவு

பெரிய புராணத்தில் அழகிய கற்பனைகள் பல நயமுற அமைந்துள்ளன. வேதியர்கள் கொழுந்துவிட்டு எரியும் வேள்வித்தீயில், மாவிலைகளைக் கொண்டு, நெய்யை முகந்து வார்த்து வேள்வி வேட்பர். திருஞானசம்பந்தர் அவதரித்த சீகாழியில், இயற்கையே வேள்வி செய்வதாகச் சேக்கிழார் கற்பனை செய்கிறார். மாமரங்கள், வயல்களின் ஓரங்களில் தழைத்துள்ளன. வயல்கள் எல்லாம் செந்தாமரைப்பூக்கள் மலர்ந்து கிடக்கும் காட்சி, அவற்றை வேள்விக் குண்டங்கள் போல் எண்ணச் செய்கின்றன. மரத்தில் மாங்கனிகள் முதிர்ந்து வெடிக்க, அவற்றின் கொழுவிய சாறுகள் கீழே வழிகின்றன. அவை, மாவிலைகளில் விழ, மாவிலைகளின் நுனிவழியாகக் கனிச்சாறு கீழே தாரை தாரையாக இறங்க, இக்காட்சி, அவ்வூர் மரங்கள் எல்லாம் வேள்வி செய்வது போன்ற தோற்றத்தைத் தருகின்றன. மாம்பழச்சாறு, கெட்டிப் பட்டு, இளகிய நெய் போலத் தோன்றும் ஒப்புமை நினைவு கூரத்தக்கது.

பரந்த விளை வயல் செய்ய பங்கயமாம்பொங்கு எரியில்
வரம்பில் வளர் தேமாவின் கனிகிழிந்த மது நறு நெய்
நிரந்தரம் நீள் இலைக்கடையில் ஒழுகுதலால் நெடிது அவ்வூர்
மரங்களும் ஆகுதி வேட்கும் தகைய என மணந்துளதால் (1910)

என்பது மேற்குறித்த கற்பனை அமைந்த அழகிய பாடல்.

பெரியபுராணம் - சமூகநோக்கு

எந்த ஒரு காப்பியமும், சமூகப்பயன்பாடு கொண்டதாக அமையவேண்டும். அது தோன்றிய காலத்தில் நிலவியிருந்த சமூக அநீதிகளைக் கண்டித்து, எதிர்நீச்சல் அடிக்கும் துணிவு, காப்பியப் படைப்பாளிக்கு வேண்டும். அத்தகு காப்பியங்களே சமூகத்தில் நின்று நிலவும். சாதி பேதங்களும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், ஆண்டான், அடிமைச் சமூக அமைப்பும் நிலவியிருந்த காலம் சேக்கிழார் காலம். இயன்றவரை, சமய மரபுகளுக்கு மாறுபடாமல், சமூகத்தை நெறிப்படுத்த அவர் அரிய முயற்சி மேற்கொண்டிருந்தமையை உணரமுடிகிறது.

முடியாட்சிக்காலத்தில், மன்னனின் நியாயமற்ற அழைப்பை ஏற்க மறுத்து, 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று வீறு கொள்ளும் உரிமை முழக்கம் அங்கே கேட்கிறது. தவறு நிகழுமானால் அரசனின் பட்டத்து யானையையும், பாகனையும் கொல்ல முடியும் என்பதை எறிபத்தர் வீரத்தில் காண முடிகிறது.

காந்தியடிகளுக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னரே, உண்ணா நோன்பையும், தனி மனிதச் சத்தியாக்கிரகத்தையும் நாவரசர் மேற்கொண்டு காட்டியமை தெரிகிறது. கோயிற் பூசை செய்யும் சிவாசாரிய மரபில் வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், கணிகையர் குலத்தில் வந்த பரவையாரைக் கலப்பு மணம் புரிகிறார். இறைவனும் இதற்குத் துணை நிற்கிறார்.

நந்தனார் வரலாறு, அக்காலத்தில் ஆதிதிராவிடர்கள் சிவாலயங்களுக்குள் சென்று வழிபடத் தடை இருந்தமையை எடுத்துக்காட்டுகிறது. ஆனால், திருஞான சம்பந்தராகிய வேதியர், தம் தேவாரப் பனுவல்களுக்கு இசைகூட்டி, யாழ் ஒலி எழுப்ப, திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற கீழ்க் குடியில்வந்த அன்பரைத் திருக்கோயிற் கருவறைவரை அழைத்துச் செல்கிறார். திருநீலநக்கர் தம் இல்லத்தில், வேள்வி மண்டபத்தில், கணவன் மனைவியாகப் பாணர் தம்பதியர் இரவிற் படுத்து உறங்க அனுமதிக்கிறார். வணிகர் மரபில் வந்த சிவநேசர், தம் மகள் பூம்பாவையை, வேதியர் குலத்து வந்த திருஞானசம்பந்தருக்கு மணம் முடிக்க விரும்பியிருந்தார் என்று தெரிகிறது. பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருந்த காலத்தில், உலகத்தார் பார்வையில் வாழ்வை இழந்தவராகத் தோற்றம் தந்த திலகவதியார், திருநீறு வழங்கித் தம்பியாரை மதமாற்றம் செய்து சைவத்திற்கு மீட்டுள்ளார். ஒரு மடாதிபதிக்கு உரிய உரிமை ஒரு பெண்ணுக்குச் சேக்கிழாரால் வழங்கப்படுகிறது.

ஆட்சியாளர் திறம்

நாடாளும் மன்னர்கள் நெறி திறம்பாது ஆளவேண்டும் என்பது, முதலமைச்சராக இருந்த சேக்கிழார் விருப்பமாக அமைந்திருக்கிறது. மனுநீதிச் சோழன் வரலாறு, நாடாள்வோருக்கு மனு நீதியினும் மேம்பட்ட நீதி வழங்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. பசுவின் கன்று தேர்க்காலில் அடிபட்டு இறந்தமைக்குப் பிராயச் சித்தம் போதும் என்று அமைச்சர்கள் கூறினர். மன்னன் ஒப்பவில்லை. கன்றை இழந்த பசுவின் துயரை, நான் என் மகனை இழந்து நின்று பெறுவதே அரசநீதி என்று மனுச்சோழன் கருதி, மகனைத் தேர்க்காலில் கிடத்தித் தேர் ஊர்ந்து நீதி செய்கிறான்.

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை

என்ற குறளுக்குப் பெரியபுராணத்தில் ஒரு சான்றாக, மனுநீதிச்சோழன் வரலாறு அமைகிறது. தம் பட்டத்துயானை இழைத்த தவறுக்காக, அதனைக் கொன்றது போதாது, யானைக்கு உரியவனாகிய என்னையும் கொல்லவேண்டும் என்று கூறிய புகழ்ச்சோழர் கற்பார் நெஞ்சில் இடம் பிடிக்கிறார். முடியாட்சிக் காலத்திலேயே, இத்தகைய அரசர் வரலாறுகளைச் சேக்கிழாரால் மட்டுமே பாட முடிந்திருக்கிறது.

தொகுப்புரை

பெரியபுராணம் பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாக அமைக்கப்பட்டிருந்த போதும், அது தனித்தன்மை உடையது என்பது இங்கு எடுத்துக்காட்டப்பட்டது. இறைவனுக்கு இணையாக, இறையருள் பெற்று மனித குலத்திற்குத் தொண்டு செய்யும் மனிதர்களும், போற்றவும் வணங்கவும் படவேண்டும் என்பதைப் பெரியபுராணம் வற்புறுத்துகிறது. சாதிகளால் பிரிவுண்டு, பிளவுபட்டு நின்ற மனித குலத்தை, ஒரு சமயத்தை மையப்படுத்தி ஒன்றுபடுத்த இயலும் என்பதைப் பெரியபுராணம் இனம் காட்டுகிறது. முடியாட்சிக்கு எதிரான, தனிமனித உரிமைப் போராட்டத்திற்கு இங்கே கால்கோள்விழா நடத்தப்பட்டுள்ளது. இயன்றவரை, பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் உள்ளார்ந்த முயற்சியில் சேக்கிழார் ஈடுபட்டிருப்பது தெரிகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர்கள், தெய்வங்களோடு திருக்கோயிலுக்குள் திருவுருவமாக எழுந்தருளிப் பெருமைபெற இயலும் என்பதை, இந்நூல் துணிவுடன் பறைசாற்றுகிறது. தமிழர் வாழ்வில், இந்நூல் ஏற்படுத்தியிருக்கும் பெருமிதங்கள் நீள நினைந்து போற்றப்பட வேண்டுவன.

சேக்கிழார் அருளிய பெரிய புராணம் 63 நாயன்மார்கள்

(பெயர், குலம், நாடு, ஊர், தொண்டு, காலம்)

சிறு அறிமுகம்

பேராசிரியர், டாக்டர் இரா. செல்வக்கணபதி, எம்.ஏ., பிஎச்.டி.,

நாயன்மார் குறிப்புகள்

1. அதிபத்த நாயனார் : நுளையர் (மீன்பிடிப்பவர்), சோழநாடு - நாகப்பட்டினம் - நவரத்தினம் இழைத்த பொன்மீனைத் தாம் வைத்துக் கொள்ளாது, கடலில் விடுத்து, சிவார்ப்பணம் செய்தவர். காலம் தெரியவில்லை.

2. அப்பூதி அடிகள் நாயனார் : அந்தணர், சோழநாடு, திங்களூர் - மகன் இறந்ததையும் மறைத்து, திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு விருந்தளிக்கத் துணிந்தவர், கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

3. அமர்நீதி நாயனார் : வணிகர், சோழநாடு, பழையாறை, கௌபீனத்திற்கு நிறையாக மனைவி, மக்கள், சொத்துக்களுடன் தாமும் தராசுத் தட்டில் ஏறி, அனைத்தையும் சிவனடியாருக்குத் தந்தவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

4. அரிவாட்டாய நாயனார் : வேளாளர், சோழநாடு, கணமங்கலம், சிவபெருமானுக்கு எடுத்துச் சென்ற நிவேதனப் பொருட்கள் தரையில் சிந்தியமைக்காகத் தம் கழுத்தை அரிந்து கொள்ள முயன்றவர். காலம் தெரியவரவில்லை.

5. ஆனாயநாயனார் : இடையர், மழநாடு, மங்கலம், பசு மேய்க்கும் போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் புகுத்தி வாசித்து அருள் பெற்றவர். காலம் தெரியவில்லை.

6. இசைஞானியார் : ஆதி சைவர், நடுநாடு, திருநாவலூர், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தாயார் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு.

7. இடங்கழி நாயனார் : அரசர், கோனாடு, கொடும்பாளூர், அடியார் வழிபாடு செய்ய நெல் திருடியவருக்கு, மேலும் நெல்லும் பொருளும் வழங்கியவர். காலம் தெரியவரவில்லை.

8. இயற்பகை நாயனார் : வணிகர், சோழநாடு, காவிரிப்பூம்பட்டினம், சிவனடியார் வேண்டியவாறு தம் மனைவியையே தானமாகக் கொடுத்தவர். காலம் தெரியவரவில்லை.

9. இளையான் குடிமாற நாயனார் : வேளாளர், இளையான்குடி, நள்ளிரவில் வீடு தேடி வந்த சிவனடியாருக்கு, வயலில் விதைத்த நெல் மணிகளை அரித்து வந்து, உரியவாறு அமுது செய்வித்தவர். காலம் தெரியவில்லை.

10. உருத்திர பசுபதி நாயனார் : அந்தணர், சோழநாடு, திருத்தலையூர். இரவும், பகலும் திருக்குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று, ஸ்ரீ ருத்திர மந்திரம் செபித்தவர். காலம் தெரியவில்லை.

11. எறிபத்த நாயனார் : சோழநாடு, கருவூர், பூக்குடலையைச் சிவனடியாரிடமிருந்து, பறித்துச் சிதறிய பட்டத்து யானையை வெட்டி வீழ்த்தியவர், காலம் தெரியவில்லை.

12. ஏயர்கோன் கலிக்காமநாயனார் : வேளாளர், சோழநாடு, திருப்பெருமங்கலம், சிவபெருமானை பரவைநாச்சியாரிடம் தூது விடுத்தமைக்காகச் சுந்தரமூர்த்தி சுவாமி களுடன் பகைத்துச் சிவனருளால் நட்புப் பாராட்டியவர், காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

13. ஏனாதிநாதநாயனார் : சான்றார் (மரம் ஏறுபவர்), சோழநாடு, எயினனூர், போர் புரியும் பகைவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும், அவன் கை வாளால் வெட்டி மாயும் படி பகைக்காது நின்றவர். காலம் தெரியவில்லை.

14. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் : குறுநிலமன்னர், தொண்டை நாடு, காஞ்சிபுரம், பதவியை வெறுத்துத் தலயாத்திரை மேற்கொண்டு, சேத்திரக் கோவை வெண்பா என்ற நூலைப் பாடியவர். கி.பி. 9 ஆம் நூற்றாண்டு.

15. கணநாதநாயனார் : அந்தணர், சோழநாடு, சீகாழி, திருஞானசம்பந்தரை வழிபட்டு, சரியை நெறியில் நின்றவர்களுக்குப் பயிற்சி அளித்தவர், காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

16. கணம்புல்ல நாயனார் : இருக்குவேளூர், புல்விற்று, நெய் வாங்கி விளக்கெரித்தவர், நெய் வாங்க இயலாத நிலையில், தம் தலை முடியையே விளக்காக எறித்தவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

17. கண்ணப்ப நாயனார் : வேட்டுவர், தொண்டைநாடு, உடுப்பூர், ஆறே நாளில் அளவற்ற பக்தி கொண்டு காளத்தி இறைவனுக்குத் தம் கண்களைப் பெயர்த்து அப்பியவர். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

18. கலிக்கம்ப நாயனார் : வணிகர், நடு நாடு, பெண்ணாகடம், தன்னிடம் பணியாற்றிய வேலையாள், சிவனடியாராக வந்த போது, அவரை வழிபட்டதோடு, வழிபாடாத தம் மனைவி கையை வெட்டியவர். காலம் தெரியவரவில்லை.

19. கலிய நாயனார் : செக்கார் (எண்ணெய் ஆட்டுபவர்) தொண்டை நாடு, திருவொற்றியூர், திருவிளக்கெரிக்க எண்ணெய் இல்லாத போது தம் இரத்தத்தால் விளக்கெரித்தவர். காலம் தெரியவரவில்லை.

20. கழறிற்றறிவார் நாயனார் : இவரை சேரமான் பெருமாள் நாயனார் என்றும் குறிப்பர். அரசர், மலைநாடு, கொடுங்கோளூர், நடராசப் பெருமான் சிலம்பொலி கேட்கச் சிறிது தாமதம் ஏற்பட அதன்வழி, சுந்தரமூர்த்தி சுவாமிகளை நண்பராகப் பெற்றவர். சிவபெருமான் பாணபத்திரர் என்ற இசைவாணருக்குத் திருமுகப் பாசுரம் கொடுத்து இவர் பால் அனுப்பினார். இவர் கயிலை சென்று 'திருக்கயிலாயஞானஉலா' பாடிய சிறப்புடையவர். காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

21. கழற்சிங்க நாயனார் : குறுநில மன்னர், சிவபூசைக்குரிய பூவைத் தன் மனைவி மோந்ததற்காக ஒரு சிவனடியார் அவள் மூக்கை அரிந்தார். இது போதாதென்று அவள் கையையும் வெட்டியவர். காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

22. காரிநாயனார் : சோழநாடு, திருக்கடவூர், 'காரிக்கோவை' என்ற நூல்பாடி, பொருள் பெற்று ஆலயப்பணி செய்தவர். காலம் தெரியவரவில்லை.

23. காரைக்காலம்மையார் : (பேயார்) வணிகர், சோழநாடு, காரைக்கால், சிவபெருமானை வேண்டி மாங்கனியும், பேய் வடிவும் பெற்றவர். வடதிருவாலங்காட்டில் சிவனார் ஆடல் கண்டவர். மூத்ததிருப்பதிகம். திருவிரட்டமடை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பன இவர் பாடிய நூல்கள். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

24. குங்குலியக்கலய நாயனார் : அந்தணர், சோழநாடு, திருக்கடவூர், மனைவியின் தாலியை விற்று குங்குலியம் வாங்கிப் புகைத்து அருள் பெற்றவர். திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த சிவலிங்கத்தைக் கழுத்தில் பூமாலை பூட்டி நிமிர்த்தியவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டினர்.

25. குலச்சிறை நாயனார் : பாண்டிநாடு - மணமேற்குடி, தம் அரசன், சமணசமயம் சார்ந்து வாழ்ந்த போதும், சிவபெருமானையும் சிவனடியார்களையும் வழிபட்டவர். திருஞான சம்பந்தரைச் சோழநாட்டிலிருந்து அழைத்து வந்து, பாண்டியனையும், நாட்டினரையும் சைவநெறிக்குத் திருப்பியவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

26. கூற்றுவ நாயனார் : குறுநிலமன்னர், களந்தை, தில்லை வாழ் அந்தணர்கள் இவருக்கு முடிசூட்ட மறுத்ததனால், தில்லைப் பெருமான் திருவடிகளையே முடியாகச் சூடிக்கொண்டவர். காலம் தெரியவரவில்லை.

27. கோச்செங்கட் சோழ நாயனார் : அரசர், சோழநாடு, முற்பிறவியில் சிலந்தியாக இருந்து சிவனை வழிபட்டவர். 70 சிவாலயங்களைக் கட்டியவர். கி.பி. 7ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

28. கோட்புலி நாயனார் : வேளாளர், சோழநாடு, திருநாட்டியத்தான்குடி, சிவ பூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரையும், தாய் வயிற்றிலிருந்த சிசுக்களையும் வெட்டிக் கொன்றவர். தம் மகளிர் இருவரையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு மகளாக வழங்கியவர். காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

29. சடையநாயனார் : ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தையார், கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

30. சண்டேசுவர நாயனார் : அந்தணர், சோழநாடு, திருச்சேய்ஞலூர், அபிடேகப்பால் குடத்தை இடறிய தந்தையின் காலை வெட்டித் தொண்டர் தலைவரானவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

31. சத்தி நாயானார் : வேளாளர், சோழநாடு, வரிஞ்சியூர், சிவனடியார்களைக் குறை கூறுபவர்களின் நாக்கை அறுத்தவர். காலம் தெரியவரவில்லை.

32. சாக்கிய நாயனார் : வேளாளர், திருச்சங்கமங்கை, மறவாது நாள்தோறும் (அன்பு கொண்டு) சிவலிங்கத்தின் மீது கல் எறிந்து வழிபட்டவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கும் முற்பட்டவர்.

33. சிறப்புலி நாயனார் : அந்தணர், சோழநாடு, திருஆக்கூர், சிவனடியார்களுக்கு உணவும், பொருளும் வழங்கியவர். காலம் தெரியவரவில்லை.

34. சிறுத்தொண்ட நாயனார் : மாமாத்திரர், சோழநாடு, திருச்செங்காட்டங்குடி, சிவபெருமானுக்குத் தன் ஒரே மகனை, கறியாக்கி அமுது படைத்தவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

35. சுந்தரமூர்த்தி சுவாமிகள் : ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர், பெரிய புராணம் தோன்ற முதல் நூலாகத் திருத்தொண்டத் தொகை பாடியவர். இறைவனால் தடுத்து ஆட் கொள்ளப்பட்டவர். முதலை வாய்ப்பாலகனை மீட்டவர். பெரியபுராணக் காப்பியத் தலைவர். கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

36. செருத்துணை நாயனார் :வேளாளர், சோழநாடு, தஞ்சாவூர், சுழற்சிங்க நாயனாரின் மனைவி சிவபூசைக்குரிய பூவை மோந்தமைக்காக அவர் மூக்கை அறுத்தவர். காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

37. சோமாசிமாற நாயனார் : அந்தணர், சோழநாடு, திருஅம்பர், வேதவேள்விகள் செய்தவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டவர். காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

38. தண்டியடிகள் நாயனார் : சோழநாடு, திருவாரூர், பிறவிக்குருடராக இருந்தும், திருக்குளப்பணி செய்து, குருடு நீங்கப் பெற்றவர். சமணரை வென்றவர். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

39. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் : ஏகாலியர் (வண்ணார்) தொண்டை நாடு, காஞ்சிபுரம், சிவனடியாருக்கு வாக்களித்தபடி, அவர் துணியைத் தோய்த்து, உலர்த்தித் தர இயலாததால், தன் தலையைக் கல்லின் மீது மோதிக்கொண்டவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

40. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் : அந்தணர், சோழநாடு, சீகாழி, உமையம்மையாரால் திருமுலைப்பால் ஊட்டப்பெற்று சிவஞானம் பெற்றவர். எலும்பைப் பெண்ணாக்குதல் முதலிய பல அற்புதங்கள் நிகழ்த்தியவர். பாண்டிய நாட்டில் சைவத்தை நிலை நிறுத்தியவர். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

41. திருநாவுக்கரசு சுவாமிகள் : வேளாளர், நடுநாடு, திருவாமூர், சமணசமயம் சென்று தமக்கையார் திலகவதியார் தவத்தால் சைவசமயம் மீண்டவர். உழவாரத்தால் கைத்தொண்டு செய்தவர். கல் தெப்பமாக மிதக்கக் கரை சேர்ந்தவர். திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் பாடியளித்தவர். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

42. திருநாளைப் போவார் நாயனார் : (நந்தனார்) புலையர், சோழநாடு, ஆதனூர், தில்லையைக் காணவிரும்பி, தீப்புகுத்து முனிவராய் எழுந்து, சிற்றம்பலவன் திருமுன்பு மறைந்தவர். காலம் தெரியவரவில்லை.

43. திருநீலகண்ட நாயனார் : குயவர், சோழநாடு, சிதம்பரம், அயலார் அறியாவண்ணம், மனைவியின் சபதத்துக்கு உடன்பட்டு, அவரைத் தீண்டாது. இளமையிலும், முதுமையிலும் இல்லறம் நடத்தி, சிவனருளால் இளமை பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

44. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் : பாணர், நடுநாடு, திரு எருக்கத்தம்புலியூர் திருஞானசம்பந்தருடன் தலங்கள் தோறும் சென்று, யாழ் வாசித்துத் தொண்டு செய்தவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

45. திருநீலநக்க நாயனார் : அந்தணர், சோழநாடு, சாத்தமங்கை, சிவலிங்கத்தின் மேனி மீது வாயால் ஊதிய மனைவியை வெறுத்து, சிவனருளால் உண்மையை உணர்ந்தவர். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

46. திருமூல நாயனார் : இடையர், சோழநாடு, சாத்தனூர், மூலன் என்ற இடையர் உடலில் தாம் புகுந்து, யோகத்தில் தலை நின்று, திருமந்திரம் என்ற நூலைப் பாடியளித்தவர் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

47. நமிநந்தி அடிகள் நாயனார்: அந்தணர், சோழநாடு, ஏமப்பேரூர், தண்ணீரால் விளக்கெரித்தவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

48. நரசிங்க முனையரைய நாயனார் : குறுநில மன்னர், நடுநாடு, சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்தவர், சிவவேடம் பூண்ட காமக் குறி மலர்ந்த தூர்த்தனையும் வழிபட்டவர். கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

49. நின்றசீர் நெடுமாற நாயனார் : அரசர், பாண்டி நாடு, மதுரை, திருஞானசம்பந்தர் தந்த திருநீற்றால் சுரம் நீங்க, அவர் திருவருளால் கூன் நீங்கப்பெற்றுச் சைவரானவர். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

50. நேச நாயனார் : சாலியர்-காம்பீலிநகரம், சிவனடியார்களுக்கு ஆடைகளைத் தாராளமாக வழங்கியவர். காலம் தெரியவரவில்லை.

51. புகழ்ச்சோழ நாயனார்: அரசர், சோழநாடு, உறையூர், பகைவனது அறுபட்ட தலையில் சிவசின்னமாகிய சடையைக்கண்டு, அஞ்சி உயிர்நீத்தார். காலம் தெரியவரவில்லை.

52. புகழ்த்துணை நாயனார் : ஆதிசைவர், செருவிலிபுத்தூர், சிவபூசைக்கு உதவியாக பஞ்சகாலத்தில் இறைவனால் காசு அளிக்கப்பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

53. பூசலார் நாயனார் : தொண்டைநாடு, திருநின்றவூர், மனதினால் கோயில் கட்டிச் சிவ வழிபாடு செய்தவர். திருஞானசம்பந்தர் காலத்திற்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தவர்.

54. பெருமிழலைக் குறும்ப நாயனார் : பெருமிழலையூர், சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு, அவர் கயிலை செல்லுதல் அறிந்து, யோக நெறியால் தாமும் கயிலை சேர்ந்தவர், காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

55. மங்கையர்க்கரசியார் : (மானியார்) அரசியார், பாண்டிநாடு, திருஞானசம்பந்தரை வரவழைத்துத் தம் கணவரையும், பாண்டிய நாட்டையும் சைவ நெறிக்குத் திருப்பியவர். காலம் 7ஆம் நூற்றாண்டு.

56. மானக்கஞ்சாற நாயனார் : வேளாளர், கஞ்சாறூர், சிவனடியார் வேண்டியவாறு மணம் கொள்ள இருந்த மகள் தலைமுடியை அறுத்து வழங்கியவர். காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

57. முருகநாயனார் : அந்தணர், சோழநாடு, திருப்புகலூர், பூத்தொண்டு செய்து, திருஞானசம்பந்தர் திருமணநாளில் சிவசோதியில் கலந்தவர். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

58. முனையடுவார் நாயனார் : வேளாளர், சோழநாடு, திருநீடூர், கூலிக்குப் போர் செய்து, அக்கூலிகொண்டு சிவனடியார்களுக்கு உதவிகளைச் செய்தவர். காலம் தெரியவரவில்லை.

59. மூர்க்க நாயனார் : வேளாளர், தொண்டை நாடு, திருவேற்காடு, சூதாட்டத்தில் கிடைத்த வருவாயைக் கொண்டு சிவனடியார்களுக்கு உதவியவர். காலம் தெரியவரவில்லை.

60. மூர்த்தி நாயனார் : வணிகர், பாண்டியநாடு, மதுரை, சந்தனம் வழங்க முட்டுப்பாடு ஏற்பட்ட போது, தம்முழங்கை எலும்பையே அரைக்க முனைந்தவர். திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி ஆகிய மூன்றால் உலகாண்டவர். காலம் தெரியவரவில்லை.

61. மெய்ப்பொருள் நாயனார் : குறுநிலமன்னர், நடுநாடு, திருக்கோயிலூர், வஞ்சித்துச் சிவவேடமணிந்து வந்த பகைவன் கைவாளால் வெட்டுண்டு, அவனை மன்னித்து உயிர்நீத்தவர். காலம் தெரியவரவில்லை.

62. வாயிலார் நாயனார் : வேளாளர், தொண்டைநாடு, மயிலாப்பூர், மனதினாலேயே ஞானபூசை செய்து சிவன் அருள் பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

63. விறல்மிண்ட நாயனார் : வேளாளர், மலைநாடு, செங்குன்றூர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தவர். காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

பெரியபுராண நாயன்மார் அருள்வரலாறு ஒலிக்களஞ்சியம் அமைப்பு முறை

1. தெய்வச் சேக்கிழார்
2. மனுநீதிச் சோழர்
3. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
4. ஏயர்கோன் கலிக்காமர்
5. கழறிற்றறிவார் (சேரமான் பெருமாள் நாயனார்)
6. சடையனார், இசைஞானியார், நரசிங்க முனையரையர், பெருமிழலைக் குறும்பர்
7. தொகையடியார்
8. திருநீல கண்டர்
9. இயற்பகை நாயனார்
10. இளையான்குடி மாறர்
11. மெய்ப்பொருள் நாயனார்
12. மானகஞ்சாறர், விறல்மிண்டர்
13. அமர்நீதி நாயனார், திருநீல நக்கர்
14. எறிபத்த நாயனார்
15. புகழ்ச்சோழர், ஏனாதி நாதர்
16. கண்ணப்ப நாயனார்
17. குங்குலியக் கலயர்
18. அரிவாட்டாயர், மூர்த்தியார்
19. ஆனாயர், திருநீலகண்ட யாழ்ப்பாணர்
20. திருக்குறிப்புத் தொண்டர், முருகர்
21. திருநாளைப் போவார் (நந்தனார்)
22. சண்டேசுர நாயனார்
23. திலகவதியார்
24. திருநாவுக்கரசர்
25. அப்பூதியடிகள்
26. குலச்சிறையார், நின்றசீர் நெடுமாறர்
27. காரைக்கால் அம்மையார்
28. நமிநந்தியடிகள், கலியநாயனார், கணம்புல்லர்
29. திருஞான சம்பந்தர்
30. மங்கையர்க்கரசியார்
31. திருமூலர்
32. தண்டியடிகள், கணநாதர்
33. சாக்கியர், முனையடுவார், மூர்க்கர்
34. சிறப்புலியார், இடங்கழியார், புகழ்த்துணையார், நேசர்
35. சிறுத்தொண்டர்
36. கோட்புலியார், கூற்றுவர், காரிநாயனார்
37. அதிபத்தர், உருத்திர பசுபதியார், சோமாசி மாறர்
38. கலிக்கம்பர், கழற் சிங்கர், செருத்துணையார்
39. பூசலார், வாயிலார், சத்தி நாயனார்
40. கோச்செங்கட்சோழர், ஐயடிகள் காடவர்கோன்

Produced & Marketed By: ARUN AUDIOS,
H15/2, KARIKALAN STREET, KALASHETRA COLONY, BESANT NAGAR, CHENNAI - 600 090.
Phone : 0091-44-24916888 Cell : 94440 21113
E-mail : nayanmar_63@yahoo.co.in



நயவுரை நம்பி, வைணவச் செம்மல்

டாக்டர். திரு.S ஜெகத்ரட்சகன் அவர்கள்

வழங்கிய அறிமுகவுரையிலிருந்து

சைவ சமயத்திற்குப் பெருமை சேர்க்கும் கலைக் களஞ்சியமாக, சைவ நாயன்மார்களின் அருள் வரலாறுகளைக் கொண்டதே சேக்கிழார் அருளிய பெரியபுராணம். வேடர் முதல் வேந்தர் வரை, வலைவாணர் முதல் கலைவாணர்கள் வரை, அறுபத்து மூன்று நாயன்மார்களின் பெருமித வரலாற்றை இந்நூல் பக்திச் சுவையோடு பாடிக் காட்டுகிறது.

மனிதராய்ப் பிறப்பது அரிது; அவ்வாறு பிறந்தாலும் ஊன மில்லாத மனிதனாகப் பிறப்பது அரிது; அப்படியிருந்தாலும், மனிதருள்ளும் ஆடவராய்ப் பிறப்பது அரிது; ஆடவருள்ளும் அந்தணராய்ப் பிறப்பது அரிது; அந்தணரிலும் வேதம் வல்லவனாகப் பிறப்பது அரிது. அவனே முத்தி பெறுவான் என்பது ஆதிசங்கரர் அருளிய தோத்திரப்பாடல். வேதம் வல்ல வேதியரைத் தவிர வேறெவர்க்கும் அருள் நிலை வாய்க்காது என்று அவர் நினைத்தார். ஆனால், வேடன் ஒருவன் பக்தியால் உருகி வேதியரும் வணங்குமாறு காளத்தியில் அருள் பெற்றான் என்பது பெரியபுராணம்! எந்த ஜாதி வேறுபாடும், எள்ளளவும் கொள்ளாமல், இந்த நாட்டவரே அன்றி, எந்த நாட்டவரும் , அருளாளர்களாக இருந்தால் அவர்களும் நாயன்மார்களே என்பது சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்! இதனை ஒரு புரட்சிப்புராணம் என்றே கூறலாம்

பேராசிரியர் அவர்களின் இம்முயற்சிக்கு உதவும் வாய்ப்பும், இக்குறுந்தகடுகளுக்கு அறிமுகவுரை கூறும் வாய்ப்பும் அளவிலா மகிழ்ச்சியைத் தருகின்றன.

செல்வக் கணபதி என்னும் போதினிலே, நல்லதேன் வந்து பாயுது காதினிலே என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

– டாக்டர். S. ஜெகத்ரட்சகன் M.A., D.Lit.,